Sellian
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road
Jaffna.
T. Phone: 23794

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 3-50

செல்லையா
சிவபாதலிங்கம்
தங்க வைர
நகை வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி 23794
ஒடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

கடிகை 5: சுக்கில ஸூல பங்குனி மீ 19 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 றமழான் பிறை 4 (01-04-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 48

பிரபாகரன் இன்று பத்திரிகையாளருடன் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் இன்று யாழ்ப்பாணத்தில் உள்ளூர் பத்திரிகையாளர்களைச் சந்திப்பார்.

இந்தச் சந்திப்பு இன்று மாலை நல்லூரில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றில் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் உயர் மட்டப் பிரமுகர்கள் சிலரும் உடனிருப்பர் என்று தெரிய வந்தது. [உ-9]

நாகவிகாரைக்கு மீண்டும் சிங்களவர்கள் வருகை!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1 நயினாதீவில் உள்ள நாக விகாரைக்கு தென்பகுதியிலிருந்து சிங்கள பக்தர்கள் ரெம்பித்துள்ளனர்.

கடந்த சுமார் ஏழு வருடங்களின் பின் தற்பொழுது ஒரளவு சமூக நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்தே இவர்கள் இங்கு வரத்தொடங்கியுள்ளனர்.

தென் பகுதியிலிருந்து வந்த சுமார் 25 பேர் நேற்று நயினாதீவு செல்ல யாழ். பஸ் நிலையத்தில் காத்து நின்றனர். (ஒ-9)

வரதர் பாவித்த ஜீப் கண்டியில் மீட்கப்பட்டது!

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் பாவித்ததாகக் கூறப்படும் ஜீப் ஒன்று கண்டியில் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனங்களைத் திருடும் கோஷ்டி ஒன்றை பொலீஸார் கைதுசெய்ததைத் தொடர்ந்து இது விஷயம் வெளியானது.

இந்தக் கோஷ்டியில் 31 பேர் இருந்தனர். களவு போன 36 வாகனங்களும் மீட்கப்பட்டன. அவற்றில் ஒன்றுதான் இந்த ஜீப் என்று கூறப்படுகிறது. (ஒ-எ)

தமிழக சட்டசபையில் நேற்றுகூச்சலும் குழப்பமும்!

எம். எல். ஏக்கள் வெளியேற்றப் பட்டனர்

சென்னை, ஏப் 1

இலங்கையில் இந்திய அமைதிப்படையினரின் நடவடிக்கைகள் குறித்து எழுப்பப்பட்டபிரச்சினையால் நேற்றும் தமிழ் நாடு சட்டப்பேரவையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன.

இதனால் இந்திரா காங்கிரஸ் மற்றும் அ.தி.மு.க உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்பாயமாக வெளியேற்றப்பட்டனர்.

நேற்று முன்தினம் தமிழ் நாடு முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி இலங்கையில் இந்திய அமைதிப்படையினரின் நடவடிக்கைகள் பற்றி வெளியிட்ட அறிக்கைகுறித்து இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் சில விளக்கங்களைக் கேட்ட போது அவைத்தலைவர் அதற்கு அனுமதி மறுத்த போதே குழப்பம் ஏற்பட்டது. (க)

புதிய அமைச்சரவை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டபின்னர் அவருடன் சேர்ந்து ஜனாதிபதி மாளிகையில் வைத்து எடுத்துக்கொண்ட படம் இது. (படம்: தகவற்பகுதி)

ஓர் ஆலோசனை

வாசக நேயர்களே!

இன்று ஏப்ரல் மாதம் முதலாம் திகதி என்பதை மறந்து விடாதீர்கள்.

இன்றைய தினத்தில் மற்றவர்களை முட்டாள்கள் ஆக்குவதற்கு ஒவ்வொருவரும் முனைவார்கள். ஏப்ரல் முதலாம் திகதி என்பதை நீங்கள் மறந்து விட்டால் நீங்களும் முட்டாளாக்கப்படலாம்.

ஏப்ரல் முட்டாள் தினம் வெறும் நகைச்சுவை "முஸ்பாத்தி பண்ணுதல்" என்ற கருநிலையுடன் தொடங்கியது. ஆனால் காலப்போக்கில் -இப்போது- தனிப்பட்டவர்களுக்கு கஷ்டங்களை விளைவிக்கும் விதத்திலும் அவர்களை ஆபத்தில் மாட்டிவிடும் விதத்திலும் ஏப்ரல் முட்டாள் தினம் கொண்டாடப்படுகிறது.

ஆகவே இன்று எச்சரிக்கை!

அரச எழுதுவினைஞர் சேவைக்கு முன்னர் போல் போட்டிப் பரீட்சை!

மாவட்டரீதியில் முடிவுகள்

- அலுவலகச் செய்தியாளர்:- எஸ். ராஜ்குமார் -

யாழ்ப்பாணம், ஏப்ரல், 1

தேசிய அரச சேவை, மாகாணசேவை, அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றிற்கு எழுதுவினைஞர் மற்றும் அது சார்ந்த சேவைகளுக்கு முன்னரைப் போல் போட்டிப் பரீட்சையின் மூலமே ஆள்சேர்ப்பு நடைபெறும்.

பிற திணைக்களங்களுக்கு மாற்றம் இல்லாத சேவைகள், அகில இலங்கை ரீதியான அதிகாரிகள் தெரிவு ஆகியவற்றுக்கும் போட்டிப் பரீட்சை மூலமே ஆட்சேர்ப்பு நடைபெறும்

இப் பரீட்சைகள் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்டாலும் முடிவுகள் மாவட்ட ரீதியில் வெளியிடப்படும்.

மாவட்ட ரீதியாக வெளியிடப்படும் முடிவுகள் அவ்வப்பகுதி தரவு வங்கியில் பெறுபேறுசளின் ஒழுங்கில் வைக்கப்பட்டு, வெற்றிடங்கள் ஏற்படும்போது திறமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

அரசாங்கத்தின் ஆள்சேர்ப்பு சம்பந்தமான புதிய கொள்கைகளை அமுல் செய்வது பற்றி ஆராய்வதற்காக அண்மையில் கொழும்பில் நடைபெற்ற உயரதிகாரிகள் கூட்டத்தில் இந்தமுடிவுகள் எடுக்கப்பட்டன.

எல்லா அமைச்சுகளையும் சேர்ந்த உயரதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றினர். பொதுநிர்வாக, மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் இந்தக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரஸ்தாபக் கூட்டத்தில்—

அரசாங்கக் கொள்கையின் பிரகாரம் இனவிகிதாசாரப்படி மாகாண மாவட்ட அடிப்படையில் ஆள்சேர்ப்பு நடத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

ஒரு இனத்துக்கு குறிப்

(5ஆம் பக்கம் பார்க்க)

உதவி வைத்தியர்கள் வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு

யாழ். மாவட்ட உதவி வைத்திய அதிகாரிகள் இன்று தொடக்கம் மேற்கொள்ள இருந்த உத்தேச வேலை நிறுத்தம் ஒத்திப் போடப்பட்டுள்ளது.

யாழ் சுகாதார பணிப்பாளரை நேற்றுச் சந்தித்த உதவி வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக் குழுவினர் தமது

(5ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

சரித்திரம் மாறி மாறி மீண்டும் வாறது போலை திட்டங்களும், முறையளும், பரீட்சையளும்சுற்றிச் சுற்றிவாறது தானே கண்டது...!

புதுவருடத்துக்கு துணி வகை இறக்குமதி

கொழும்பு, ஏப் 1

புதுவருடத்தை ஒட்டி 50 கொள்கலன்களில் துணி வகைகள் தருவிக்கப்பட்டிருக்கின்றன.

இவை சலுகலா, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஆகியவை ஊடாக பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ]

இராமேஸ்வரம் கப்பல் 1,200' சீற்' வசதியுடன் "இராமானுஜம்" இனி இல்லை!!

யாழ்ப்பாணம், ஏப். 1

தலைமன்னார்—இராமேஸ்வரம் சேவைக்குப் புதிய கப்பல் ஒன்று பயன்படுத்தப்படவுள்ளது. இக்கப்பல் ஆயிரத்து 200 இருக்கைகளைக் (சீற்களை) கொண்டிருக்கும்.

அண்மையில் கொழும்பு சுங்கத் திணைக்களத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

மாநாட்டில்சுங்க கலெக்டர் திரு. லலித்லிங்கம் சுங்கப் பிரதிப் பணிப்பாளர், வடமாகாண உதவிப் பணிப்பாளர் மற்றும் குடிவரவு — குடியகல்வு, பொலீஸ், கடற்படை, ரயில்வே பகுதிகளைச் சேர்ந்தஅதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

புதிய கப்பல்சேவை எந்நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாம். அதனால் அதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகளை விரைவுபடுத்தும்படி மாநாட்டில் வைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

புதிய கப்பலான 'இராமானுஜம்' இனி இச்சேவை

சேவை; விரைவில்!

யில் சடுபடாது என்றும் தலைமன்னார் துறையிலுள்ள 15 அரச கட்டடங்கள் சேதமாகிஉள்ளன என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

பொலீஸ் நிலையத்தில் 'கலகம்' புரிந்து நியாயம் தேடிய பெண்!

யாழ்ப்பாணம் ஏப்ரல் 1

கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் என்பது முதுமொழி.

யாழ்ப்பாணம் கோட்டை பொலிஸ் நிலையத்தில் வெள்ளிக் கிழமை நடந்த சம்பவம் ஒன்று அந்த முதுமொழியை நூற்றுக்கு நூறு வீதம் உண்மையாக்கியது.

கலகம் செய்து நியாயம் தேடிக் கொடுத்தவர் ஒரு பெண்மணி.

மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு நீண்ட காலமாகத் திரும்பக் கொடுக்கப்படாத நகைகள், வெள்ளியன்று யாழ். கோட்டை பொலீஸ் நிலையத்தில் வைத்து மீளளிக்கப்பட்டன.

மேல் மாடியில் வைத்து மீளளிக்கப்பட்ட நகைகளைப் பெறுவதற்கு ஆயிரக்கணக்கானோர் சென்றிருந்தனர். அவர்களில் பலரும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

நோன்பு திறக்கும்நேரம்

01 — 04 — 90

ஸஹர் முடிவு — 4.34

நோன்பு திறக்கும் நேரம் 6.21

மாகாண சபையைக் கலைத்து தேர்தல் நடத்துக- அரசிடம் யாழ் ஆயர்

கொழும்பு, ஏப். 1

வடக்கு - கிழக்கு மாகாண சபையை உடனடியாகக் கலைத்து, தேர்தலை நடத்துமாறு யாழ்ப்பாண ஆயர் அதி. வண. வ. தியோகுப்பிள்ளை அரசாங்கத் திடம் கோரியுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபைநிர்வாகம் நடைபெறாததால் சட்டத்தையும் ஒழுங்கையும் கட்டிக்காக்க சட்டப்படி எவரும் இல்லை-என்றும் யாழ். ஆயர் தனது வேண்டுகோளில்சுட்டிக்காட்டியிருப்பதாக பி. பி. சி. நேற்றுத் தெரிவித்தது.

இந்திய அமைதிப் படையினர் வடக்கு கிழக்கு மாகாணத்தில்சுமார்5ஆயிரம் தமிழரைக் கொலை செய்த

(5ஆம் பக்கம் பார்க்க)

ராஜ்ய சபையிலும் அமளி!

புதுடில்லி ஏப் 1

அமைதிப்படையினர் இலங்கை, வடக்கு கிழக்கு மாகாணத்தில்சுமார்5ஆயிரம் தமிழர்களை அமைதிப்படையினர் கொன்றனர் என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது பற்றி இந்திரா காங்கிரஸ் எம். பி. ஜெயந்தி நடராஜன் பிரஸ்தாபித்த போது-

தி.மு.க.எம்பிவை கோபாலசாமி குறுக்கிட்டு "அது உண்மையான செய்தி" என்று சொன்னார்.

ஏனைய தி.மு.க. எம்பிக்கள் திரு. கோபாலசாமியை ஆதரித்துப் பேசினர்.

இந்திய இராணுவத்தை அவமானப்படுத்துவதாக இச்செய்திகள் உள்ளன என்று இந்திராகாங்கிரஸ் எம். எல். ஏக்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து

(5ஆம்பக்கம் பார்க்க)

3 மாதங்கள் கூடாமல் விட்டால் மாகாண சபை கலைக்கப்படும்!

ஆளுநர் நளின் தகவல்

கொழும்பு, ஏப்ரல் 1

வடக்கு, கிழக்கு மாகாண சபை தொடர்ந்து மூன்று மாதங்களுக்குக் கூட்டப்படாமல் விட்டால் அது கலைக்கப்படும். அதன் பின்னர் மாகாணசபைக்கான தேர்தல் நடைபெறும்.''

இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனிவிரத்ன தெரிவித்தார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிச் சொன்னார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கேள்வி: நிர்வாக, அரசியல் ரீதியாக திருகோணமலையில் தற்போதைய நிலையை எப்படி மதிப்பிடுகிறீர்கள்?

பதில்: மூன்று மாதங்களுக்குத் தொடர்ந்து வடக்கு - கிழக்கு மாகாண சபை கூட்டப்படாத பட்சத்தில் அது கலைக்கப்படும். அது நடந்தவுடன் தேர்தல் நடத்தப்

(5ஆம் பக்கம் பார்க்க)

சுப நேரம்

01-4 -1990

ஞாயிற்றுக்கிழமை பங்குனி 19

சுப்நேரம்:

09-11முதல் 10-41 வரை

இராகுகாலம்

04-41 முதல் 12-00 வரை

இவை இரவுக்கும் ...

பொருந்தும்

...ந்தைகள்" ... தஞ்சம்

...டந்த ... 729 இலங்கை குழந்தைகள் ... மேற்கு ஜேர்மனியில் தஞ்சமடைந்தனர்.

இக் 'குழந்தைகள்' அனைவரும் பெற்றோர் துணையுமறி விமான மூலம் பிராங்ஃபர்ட் சென்றடைந்தவர்களாவர்.

16 வயதுக்குட்பட்டவர்கள் விஸா இன்றி மேற்கு ஜேர்மனியிலும் வாய்ப்பைப் பயன்படுத்தியே இவர்கள் அங்கு ...னர்.

இந்த 'குழந்தை'களுக்கு பிராங்ஃபர்ட் விமான நிலைய அதிகாரிகள் 'விமானக் குழந்தைகள்'' என்று பெயரிட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு இப்படிப் போய் இறங்கிய 'குழந்தை'

(5ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையினரே இதனை நாளும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

தேவை

பிடவை வியாபாரத்தில் நன்கு அனுபவமிக்க ஒருவர் தேவை. கடைக் கணக்கும் எழுதக் கூடியவராக இருந்தால் நன்று. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். கவிதா ரெக்ஸ்ரைல்ஸ், 21, பெரியகடை, யாழ்ப்பாணம். (3044)

தமிழ் தட்டெழுத்தில் நல்ல தேர்ச்சியுள்ள பெண்கள் தேவை. நாற்சான்றிதழ்களுடன் காலை 8.30 - 4.30 இற்குள் நேரில் வரவும். Bond Book Stall 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/4204)

மணமகன் தேவை

யாழ்ப்பாணம் இந்து வேளாள B. Com செய்து கொண்டிருக்கும் மணப்பெண்ணுக்கு 35—42 வயதிற்கிடைப்பட்ட என்ஜினியர், எக்கவுண்டன்ற், பட்டதாரி மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். மாமிசம் சாப்பிடாதவரும் விண்ணப்பிக்கலாம் சணிசமான சீதனம் வழங்கப்படும். மங்கள ஏஜன்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (12244)

யாழ் இந்து உயர் வேளாள குலப்பெற்றோர் தமது 30 வயது நிரம்பிய 8ல் செவ்வாய் தோஷமுள்ள B. A. பட்டதாரி ஆசிரியை மகளுக்கு மணமகன் தேடுகிறார்கள். ஆசிரியர், வங்கி, அரசாங்க உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. சீதனம் கொடுக்கப்படும். சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம் - 114, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (12245)

விற்பனைக்கு

அரசாங்க அனுமதி பெற்று இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள புதிய பம்பாய் வெண்காய விதைகள் கீழ்வரும் இடங்களில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. நா. சின்னத்துரை, மே/பா C.O. சிங்கராசா, அராலி தெற்கு, சிவஐங்கரன் ஸ்ரோர்ஸ், (மருந்துக்கடை) கொட்டைக்காடு, அராலி. (3045)

நல்ல நிலையில் உள்ள Honda C 70 ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு மு. விமலேசன், அரசடி லேன், திருநெல்வேலி, கிழக்கு, யாழ்ப்பாணம். (3054)

உரும்பிராய் சந்தியில் மானிப்பாய் வீதியை முகப்பாக்க நாலு பரப்பு வரும் படிக்காணி, கிணற்றுடன் சிறந்த தண்ணீர், குடியிருப்புக்கும் வியாபாரத்திற்கும் தகுந்த இடம். கடிதம் மூலம் உடன் தொடர்பு கொள்ளவும். No 665, C/o உதயன். (3050)

பலாலி றோட் C. T. B க்கு அருகாமையில் 10 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. பகுதி பகுதியாகவும் எடுக்கலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இல. 15, 2ம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். (3055)

24 அங்குல கறுப்பு வெள்ளை சியறா (Siera) ஜேமன் தொலைக்காட்சி பெட்டி விற்பனைக்குண்டு தொடர்பு 51, கோவில் வீதி. சுண்டிக்குளி. யாழ்ப்பாணம். (12248)

புதிய BELLING COMPACT 4- 430N COOKER விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். பிலிப் நீக்கலஸ், 969/13, வளன்புரம், கொழும்புத்துறை. (3057)

WANTED

Jaffna Hindu Vellala Parents Seek For Partner Age Below 38 for Their Engineer Son Age - 45 Working in U.K Dowry is not Essential Apply Horescope With photo No- 115 C/o Uthayan, Jaffna. (12252)

PEN FRIENDS

Worldwide Introduced. Contact Informing your Name. Age, Sex, Address, Hobbies in English to; Amity International, Post Box 10, Visakhapatnam -530 001 S. India.

பயிலுனர்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பயிலுனர்கள் தேவை. இவர்கள் தேசிய பயிலுனர் சபையால் (N. A. B.) பயிற்றப்படுவர், கல்வித் தகைமை க. பொ. த. (சா. த) உள்ளவர்கள் உடன் விண்ணப்பிக்கவும். யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை உண்டு. வயது எல்லை 18—25 Hotel Gnanam's, Jaffna. (சி-4197)

சேவை

சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்துக் கொள்ளவும், பாடல்கள் பதிவு செய்து கொள்ளவும் நாடுங்கள்: பாரத் வீடியோ சென்ரர், 51/1, சுன்னாகிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/4158)

90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணிதபஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட சலிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீ காந்புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

தவறிவிட்டது

பத்மநாதன் பத்மவேணி ஆகிய எனது [675842760 V] இலக்கமுடைய அடையாள அட்டை 29 - 03 - 90 அன்று யாழ் பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (12251)

BILL CLERK

Wanted for Well Established Hardware Firm in Jaffna an Experienced Bill Clerk. Apply With Bio Data Stating Salary Expected. No: 663, C/o Uthayan. (3046)

கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Unsexed) தனிசிகப்பு கறுப்பு, சேவல் (பிலிமத்) கறுப்பு (வரி) சேவல், (Lohmau) பிறவுண் சேவல், வெள்ளை கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள் 4-4-1990 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியேபதிவு செய்க இல- 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அருகில்) (3056)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1990-05-02 ஆம் தேதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

உடற்கல்விப் பணிப்பாளர்

சம்பள அளவுத்திட்டம்:

குபா:
6000 - 10 x 200 - 8000
(EP - வினைத் திறமை காண் தடை)

குபா:
8250 - 7 x 250 - 10000
(மாதமொன்றுக்கு)

மேற் குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களும், விவரங்களும் இப்பல்கலைக் கழகத்தில் சிரேட்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23x10 ச.மீற்றர் அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள்மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில்வைக்கப்படுவார்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990. 03. 30
(சி-4407)

குருக்கள் தேவை

கோண்டாவில் இல்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்திற்கு நித்தியபூசை செய்வதற்கு குருக்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

இங்ஙனம்:
ஆலயச் செயலாளர்,
இ. யோகராசா.
[3101]

குருகுலம் பெண்கள் பயிற்சி நெறி

மேற்படி பயிற்சி நெறிக்கு 18—40 வயதுக்குட்பட்ட க. பொ. த (சாதாரணம்) சான்றிதழ் பெற்ற யுவதிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் 14-04-90ந் திகதிக்கு முன்னர் கோரப்படுகின்றன. தையல், நெசவு, மனையியல், கைத்தொழில், விவசாயம் போன்ற 10 துறைகளில் 6 மாத இலவசப்பயிற்சி அளிக்கப்படும்.

தலைவர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்.

7ம் வாய்க்கால்,
கிளிநொச்சி. [சி-4198]

Jaffna College Institute of Technology Vaddukoddai

மரவேலை, கட்டிட வேலை பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் ஸ்தாபனத்தின் உதவியுடன் இலவச பயிற்சி நெறிகள் 02-05-90 மீண்டும் ஆரம்பமாகின்றன.

★ காலம்: — 2½ மாதங்கள்

ஒழுங்கான பயிலுனர்கட்கு:-

1. நாளாந்த ஊக்குவிப்புப் படியாக ரூ. 30/- வழங்கப்படும்.
2. பயிற்சி முடிவில் இலவச உபகரணப் பொதி.
3. தூர இடத்து பயிலுனர்க்கு விடுதி வசதிகள் அளிக்கப்படும்.
4. ஆரம்பப் பயிற்சியின் பின் 10 மாதங்கள் வேலைத் தளங்களில் தொழில் பயிற்சி.

ஆர்வமுள்ள மாணவர்கள் உடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 12-04-90

— பணிப்பாளர்

[சி-4406]

3ஆவது ஆண்டு நினைவஞ்சலி

(01 - 04 - 1990)

திருமதி செல்வத்துரை மகேஸ்வரி

எங்கள் அன்புத் தாயே! நீங்கள் மறைந்து மூன்று ஆண்டுகள் சென்றாலும் எங்கள் துயர் இன்னும் ஓயவில்லையம்மா! எங்கள் இதயம் உள்ளவரை உங்கள் நினைவுகள் மாறாது. உங்கள் ஆத்ம சாந்திக்கு என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரன், பேரன்மார், சகோதரங்கள்.

தெட்டிப்பிரம்,
கோண்டாவில். (2976)

★ கம்பியூட்டர் கல்வி ★

✶ Diploma in Data Processing and Computer Programming in BASIC Language

ஆரம்பம்:- 04 April 1990 10.30 a.m (திங்கள், புதன், வெள்ளி)
07 April 1990 11.00 a.m (சனி, ஞாயிறு)

✶ LOTUS 1 - 2 - 3

ஆரம்பம்:- 04 April 1990 9.00 a.m

✶ WORD PROCESSING

ஆரம்பம்:- 07 April 1990 9.30 a.m

G. C. E. (O/L) படித்த இருபாலாரும் சேரலாம் மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

UNIKCO COMPUTER CENTRE

No. 5,
Power House Road,
2nd Lane, Jaffna.

[சி-4199]

கலை,வர்த்தகக் கல்லூரி C. C. A

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

B. A — G. A. Q

அரசியல் விஞ்ஞானம்
வினா, விடை வகுப்பு
தமிழ்
ஆரம்பம்: 01 - 04 - 1990 ஞாயிறு
பகல் 1. 00 மணி

குறிப்பு: 1991 மார்ச் G. A. Q — B. A பரீட்சைகளுக்கு சகல பாடங்களுக்குமான வகுப்புகளும் ஆரம்பமாகின்றன. (சி-4200)

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



லெப்டினன்
இராசஇரத்தினம் செல்வகுமார்
(சினைப்பர் மயூரன் - பபி)

தாய் மேல்:- 03- 07- 1962
தமிழ் மண் மீது:- 01- 04- 1987

காவியம் படைத்து விட்ட கட்டழகா
நீ காலத்தால் அழியாத சின்னமடா
தமிழ் இனத்திற்கோர் தங்கமடா
நீ தாய் நாட்டின் செங்குருதியடா
விடுதலை வேங்கைகளின் விளக்குமடா
புலி வீரர்கள் வரிசையின் புனிதமடா
தமிழ் தலைவரின் மெய்ப் பாதுகாவலனாம்
தரணியில் அவன் சினைப்பர் மயூரன்
என்றும் இனிய தமிழ் மக்களை
ஏய்த்து விட்ட நாளோடா
என்றுதான் உனைக்காண்போம்
எம் இனிய வீரவேங்கையே!

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணன்மார், அண்ணி,
தங்கைமார், மைத்துனன், பெறாமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

சோடாக் கொம்பனி லேன்,
மல்லாகம்.
01- 04- 1990 (12254)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

பொன்னையா சபாரத்தினம்

(இளைப்பாறிய அதிபர்- வசாவிளான் மத்தியமகா வித்தியாலயம்

அன்னை மடியில்: 24-10-1917
ஆண்டவன் அடியில்: 02-03-1990

உன் அன்பான பேச்சாலும், புன்சிரிப்பாலும், பணிவான நடத்தையாலும், உறுதியான செய்கையாலும் எம் இதயம் கவர்ந்த அன்பின் தெய்வமே! எங்கு சென்றாய்? காலமெல்லாம் எங்கள் எல்லோருக்கும் வழிகாட்டியாய் இருந்தாயே காலன் உன்னை எங்களிடமிருந்து பிரித்தானே? நீ சென்றாலும் நீ விட்டுச் சென்ற பாசம், அன்பு, நேர்மை எங்களை விட்டு ஒரு போதும் நீங்காது உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

1.4.90 இன்று நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளை.

பிளாக் வீதி,
சங்கானை கிழக்கு,
சங்கானை. (12240)

உடன் தேவை, நேரில் வரவும்

அச்சுவேலி தொழிற் பேட்டையில் அமைந்துள்ள எமது தொழிற்சாலைக்கு 'எவர்சில்வர்' பொருட்கள் பொலிஷிங் செய்வதில் முன் அனுபவமுள்ள பொலிஷர் தேவை. அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

Sabha Industries (PTE) Ltd.,
Units 5 & 6, Industrial Estate,
Atchuvely.

[2987]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:

நோக்கினாள் நோக்கி இறைஞ்சினான் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்

பொருள்:

என்னை நோக்கினாள்; யான் கண்டதும் நோக்கித் தலை குனிந்தாள்; அது அவள் வளர்க்கும் அன்பினுள் வார்க்கின்ற நீராகும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
01-04 1990 த. பெ. இலக்கம் : 23

பல எலிகள் சேர்ந்து புற்றெடுக்க முடியுமா?

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தனது அமைச்சரவையை மாற்றி அமைத்துவிட்டார். அமைச்சரவையில் அங்கம் வகிப்போரின் செயல் திறமையை அவதானித்து, மதிப்பீடு செய்து, வருடத்துக்கு ஒரு முறை அமைச்சரவை மாற்றி அமைக்கப்படும் என்ற தமது வாக்குறுதியை நிறைவேற்றி இருக்கிறார்.

போட்டியில் கலந்து கொள்ளும் உதைபந்தாட்ட அணி ஒன்றில் தலைவன், எவ்வாறு தனது வீரர்களைத் தெரிவு செய்வானோ, அதே நிலையில் நின்றே தாமும் புதிய அமைச்சரவைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யப் போவதாக செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரசாங்கக் குழுக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி கூறியிருந்தார்.

பாடசாலையில் மாணவனுக்குப் புள்ளி வழங்கி, வகுப்பேற்றம் அல்லது அதில் தோல்வியை ஏற்படுத்தும் ஆசிரியரைப் போல, ஜனாதிபதி பலருக்கு இறக்கமும், சிலருக்கு ஏற்றமும் வழங்கியிருக்கிறார் ஆனால் புள்ளிகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பது குறைபாடு. ஜனாதிபதியே இரகசியப் பரீட்சையை வைத்து, தானே புள்ளிகளும் வழங்கி, புள்ளிகளின் விவரத்தையும் தனக்குள்ளே இரகசியமாக வைத்திருக்கிறார்.

புள்ளிகள் பகிரங்கப்படுத்தப்படாமையால் எம். பிக்களுக்கு வழங்கப்பட்ட ஏற்ற, இறக்கம் சரியானதா என்பதை அறியும் வாய்ப்பு எவருக்கும் இல்லை; மக்களுக்கும் இல்லை. தலைவன் சொன்னதெல்லாம் தர்மம் என்பது போலாகி விட்டது.

உண்மையில் உழைப்பு, திறமை என்பன தான் அளவு கோல்களாக இருந்தனவா அல்லது ஜனாதிபதியின் சொந்த விருப்பு, வெறுப்புகள் தான் சமன் செய்து சீர் தூக்கும் கோல்களாகினவா என்பதை எவருமே அறிந்து கொள்ள முடியாது உள்ளது! இதனை ஒரு வகைச் சர்வாதிகாரம் என்று கூடக் கூறலாம் அல்லவா?

அமைச்சர்களின் எண்ணிக்கை "எக்கச் சக்கமாக" உயர்த்தப்பட்டுள்ளமை, பல கேள்விகளை இயல்பாகவே உண்டாக்குகின்றது. புதிதாகத் திட்ட அமைச்சர்கள் என்ற பதவிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் 125 எம். பிக்களில் 75 பேர் அமைச்சர் அடைமொழியைப் பெற்று விட்டார்கள்!

நாட்டின் பொருளாதாரம் நலிந்து போயுள்ள நேரத்தில் 75 அமைச்சர்கள் தேவையா? வீண் விரயத்தையும், ஊழலையும் ஒழிக்கக் கங்கணம் கட்டிவிட்டதாகக் காட்டிக்கொண்டு, அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது நடைமுறையில் அவற்றை ஊக்குவிப்பதாக வல்லவா முடியும்?

அமைச்சர்களுக்கு இன்ன இன்ன பணிகள் என்று வகுத்துக் கூறப்பட்டாலும், மூன்று வித அமைச்சுகள் இயங்கும் போது வேலை பிரதிபடலும் (Duplication), வீண் தாமதமும், மேலுறையுறுதலும் (Overlapping) ஏற்பட இடமுண்டு. ஒரே அமைச்சைச் சேர்ந்த மூன்று ரக அமைச்சர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு தோன்றித் திட்டங்கள் சரிவர செயலுருப் பெற முடியாமலும் போகலாம்.

கட்சிக்குள் பிளவு ஒன்று தோன்றக்கூடும் என்பதை உணர்ந்து அதனைத் தடுக்கும் முன்னேற்பாடாகத் தான், ஆளுங்கட்சி எம். பிக்களில் அறுபது சதவீதமானோருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டிருக்கிறதோ என ஊகிக்க இடமுண்டு! இல்லையேல், இந்தச் சிறிய நாட்டை நிர்வகிக்க இத்தனை அமைச்சர்களா என்று மூக்கில் விரலை வைக்க வேண்டி உள்ளது.

குறைந்த எண்ணிக்கையில் அமைச்சர்களை நியமித்து, அலுவல்களைச் செய்விக்காமல், மேலும் பலரை நியமிப்பது அவர்களின் திறமையிலும் விசுவாசத்திலும் நம்பிக்கை கொள்ளாததால் தானா என்ற கேள்வியும் எழுகிறது. அவ்வாறாயின் அவர்களை ஏன் நியமிக்க வேண்டும்?

எந்த ஒரு யோசனைக்கும் ஒரு பக்கசார்பான காரணங்களைக் கூறி அதனை நியாயப்படுத்துவது சுலபம். தர்க்கம் புரிவது இலகு. ஆனால் அது நடைமுறையில் சாத்தியமா, எதிர்பார்க்கும் அறுவடையைத் தருமா என்பதே கேள்வி.

அதிகாரம் மக்களுக்கு பரவலாக்கப்பட வேண்டுமே அன்றி மந்திரிகளிடையேயல்ல. அவ்வாறு செய்வதால் அரசியல் சிறப்பை வளர்ப்பதற்குப் பதில் சீர்கேடுகளையே வளர்க்க முடியும். அதனால் பாதிக்கப்பட இருப்பவர்களும், அழுதுவடிய வேண்டியவர்களும் மக்களே.

ஏதோ, பல எலிகள் சேர்ந்தால் புற்றெடுக்கா என்ற நிலை ஏற்படாமல் ஜனாதிபதி பார்த்துக் கொண்டால் சரி தான்.

முறைசாராக் கல்விப் பயிற்சி நாளை ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1
1990 கல்வியாண்டில் ஆரம்பிக்கப்படவுள்ள முறைசாராக் கல்விப் பயிற்சி நெறிகள் நாளை 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பயிற்சி நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

யாழ். கல்வித் திணைக்களம் முறைசாராக் கல்விப் பொறுப்பாளர் திரு: எஸ். கப்பிரமணியம் இத்தகவலை வெளியிட்டார்.

ஏப்ரல் 2 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவுக் கடிதம் கிடைக்காதவர்கள் வேறு பயிற்சி நெறியைத் தொடர விரும்பினால் யாழ். கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவுடன் தொடர்பு கொள்ளும்படி அவர் கேட்டுக்கொள்கின்றார் (க-7)

வடக்கு- கிழக்கு இடமாற்ற சபையில் தொழிற்சங்கங்களுக்கும் இடம்தரப்படும்

மட்டக்களப்பு, ஏப் 1

வடக்கு – கிழக்கு மாகாண சபையால் மேற்கொள்ளப்பட இருக்கும் ஆசிரியர்கள் தொடர்பான இடமாற்ற சபையில் ஆசிரிய தொழிற் சங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம்வழங்கப்படும். வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரியர்களில் 15 சதவீதத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களே இடமாற்றசபையில் பிரதிநிதித்துவம் பெற உள்ளன.

இத்தகவலை வடக்கு-கிழக்கு மாகாணசபையின் கல்வி அமைச்சின் புதிய செயலாளர் திரு. இ. ஜே. சற்குணராஜா மட்டக்களப்பில் செய்யியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண ரீதியான இடமாற்ற சபையின் தலைவராக அமைச்சுச் செயலாளர் இருப்பார். செயலாளராக கிரேஷ்ட மாகாண கல்விப் பணிப்பாளரும் உறுப்பினராக பிரதி கல்வி பணிப்பாளரும் (நிர்வாகம்) இருப்பார்கள். தொழிற்சங்கங்கள் சார்பில் தலா ஒருவர் அங்கம் வகிப்பார்.

மாவட்ட ரீதியிலான இடமாற்ற சபையில் தலைவராக பிரதி கல்விப் பணிப்பாளர் இருப்பார்.

செயலாளராக பிரதம கல்வி அதிகாரியும் (நிர்வாகம்) உறுப்பினர்களாக கோட்டக் கல்வி அதிகாரிகளும் கடமை ஆற்றுவர். தொழிற்சங்க பிரதிநிதிகளும் தலா ஒருவர் அங்கம் வகிப்பார்.

தொழிற்சங்கப் பிரதிநிதித்துவம் தாபன கோவையிலுள்ள போதிலும் இதுவரை அமுல் செய்யப்படவில்லை.

ஏற்கனவே மாகாணசபையினால் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றத்திட்டத்தில் இடமாற்றம் கிடைக்கப் தவர்களிடமிருந்து அப்பீல் மனுக்கள் கிடைத்துள்ளன. பரிசீலனை செய்யப்படும் தகுதியானவர்களுக்கு அடுத்த தவணை முதல் இடமாற்றம் கிடைக்கும்.

கிராமப்புற பாடசாலைகளுக்கு சிரேஷ்ட ஆசிரியர்கள் சேவை தேவைப்படுவதால் சகல ஆசிரியர்களும் கட்டாய சேவை என்ற திட்டத்தின் கீழ் ஓரிரு வருடங்கள் சேவைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மேற்படி சேவை பூர்த்தியான பின்பு பழைய பாடசாலை வழங்கப்படும் என்ற நிபந்தனையுடன் இடமாற்றம் வழங்கப்படும்.

இதற்கு ஆசிரியர்கள் தொழிற் சங்கங்கள் ஒத்துழைப்பு தேவை.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-21)

மாகாணக் கல்வி அமைச்சின் புதிய செயலாளர் தகவல்

தீவுப்பகுதி சேவைக்கான பயணிகள் படகுகள் இரண்டும் இம்மாத நடுப்பகுதியில் வரும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

தீவுப்பகுதியில் சேவையில் ஈடுபட இரண்டு பயணிகள் படகுகளும் இம்மாதம் நடுப்பகுதியில் வந்து சேரும் என்று யாழ் – அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

புனரமைப்பு அமைச்சால் "ஓடர்" கொடுக்கப்பட்டு கொழும்பு டொக்யாட் நிறுவனத்தில் படகு கட்டும் வேலைகள் நடைபெற்று வந்தன.

ஒரு படகின் வேலைகள் முற்றாக முடிந்துவிட்டன. அதே சமயம் மற்றைய படகின் வேலைகள் இன்னும் ஒரு வாரத்தில் முடிந்துவிடும்.

இரண்டு படகுகளையும் இந்த மாத நடுப்பகுதியில் (ஏப்ரலில்) கொண்டு வந்து தருவதற்கு கூடற்படையினர் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்றும் அரச அதிபர் கூறினார்.

[ஒ – 3]

அமைதிப்படை முற்றாக விலகியது இந்தியாவுக்கு பரிபூரண தோல்வியே!

'நியூயோர்க் டைம்ஸ்' கருத்து

கொழும்பு ஏப்ரல் 01

அமைதிப் படை முற்றாக விலக்கப்பட்டதுடன் இந்தியாவின் இலங்கைக் கொள்கைக்குப்பூரணமான தோல்வியாகும் – என்று "நியூயோர்க் டைம்ஸ்" கருத்து வெளியிட்டது.

"நியூயோர்க் டைம்ஸில்" பார்பரா குறொசெட் என்பவர் மேலும் எழுதியிருப்பதாவது:–

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கெரில்லா நிபுணத்துவமும் திரு. பிரேமதாஸாவின் தந்திரமும் சேர்ந்து, சிறிய அயல் நாடொன்றின் மீது தனது பலத்தைக்காட்ட முயன்ற இந்தியாவின் முயற்சியை முதல்தடவையாக முறியடித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான 1,200 உயிர்களைப்பலி கொடுத்து இந்தியா தோற்றது. அது மட்டுமல்ல, இலங்கை வடக்கு-கிழக்கு மாகாணத்தின்துறைமுக நகரான திருகோணமலை மீது நேரடிச் செல்வாக்கை நிலை நிறுத்தும் நம்பிக்கையையும் இந்தியா இழந்து விட்டது.

விடுதலைப் புலிகளின் அரசியல் செல்வாக்கை மழுங்கடிக்கச் செய்வதற்காக இந்தியாவால் திருகோணமலையில்அமைக்கப்பட்ட மாகாண நிர்வாகமும் இம் மாதத்துடன் கவிழ்ந்து விட்டது.

1947 இல் சுதந்திரமடைந்ததில் இருந்து இந்தியா கோவாவைக் கைப்பற்றியது, சிக்கிம இணைத்துக்கொண்டது, பங்களாதேஷை தோற்றுவித்தது; பாக்கிஸ்தானைப் பின்னுக்கு தள்ளி வைத்தது –

இப்படி நியூயோர்க்டைம்ஸ் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

நினைவில் இன்று

01- 04- 1990

- ஏப்ரல் முட்டாள் தினம்
- ஜேர்மன் ஏகாதிபத்தியத்தில் முதலாவது தலைவராக இருந்த பிஸ்மார்க் பிறந்த தினம்

பிறப்பு:- 01- 04- 1815
இறப்பு:- 1898

இந்திய இராணுவம் இலங்கையில் மண் கவ்வியது

பிரபல ஜெர்மன் பத்திரிகை வர்ணிப்பு

ஹாம்பர்க், ஏப்ரல் 1

உலகின் நான்காவது பெரிய இராணுவம்இலங்கையில்மண் கவ்வியது.

மேற்கு ஜேர்மனியில் வெளியாகும் பிரபல பத்திரிகை ஒன்று ("செய்லங்") முன் கண்டவாறு இந்தியப் அமைதிப்படை விலகள் பற்றி வர்ணித்துள்ளது.

இராணுவ நோக்கில்பார்க்கும் போது நான்காவது பெரிய இராணுவம் விலகியதைத் தொடர்ந்து சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையேயான மோதல் மோசமடையும்.

அரசியல் அம்சங்களுடன் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விஷயங்களும் அமைதிப்படையைவிலக்கிகொள்ள புதுமல்லியைத் தூண்டின.

இலங்கை நடவடிக்கை காரணமாக இந்தியாவுக்கு நூறு கோடி டாலர்களைச் செலவு செய்ய நேர்ந்தது.

இப்படி அப்பத்திரிகை மேலும்தெரிவித்தது. (ஒ-எ

ராஜீவின் வக்கிர புத்தியினால் ஈழத்தில் தமிழர்கள்மடிந்தனர்

ராஜ்யசபையில் தி,மு.க. எம்.பி. கோபாலசாமி

புதுடில்லி, மார்ச் 31

ராஜீவ்காந்தி என்ற தனி மனிதரின் வக்கிர புத்தியினால் தான் பெரும் எண்ணிக்கையான ஈழத் தமிழர்களும், இந்திய வீரர்களும் மடிந்தனர்.

தி. மு. கழக எம்.பி.யான திரு. கோபாலசாமி ராஜ்ய சபையில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இலங்கைப் பிரச்சினையில் நடைபெற்ற குழப்பத்துக்கும் குழறுபடிக்கும்அத்துமீறியஇந்திய இராணுவ நடவடிக்கைகளுக்கும் முன்னைய ராஜீவ் காந்தி அரசுதான் முழுப் பொறுப்பாளி ஆகும்.

"ராஜீவ் அரசுபெற்ற குழந்தையை" வி. பி. சிங். அரசு சுமக்க முற்படுவானேன்? அள்ளித்தெளித்த கோலத்தில் உருவான இந்திய-இலங்கை ஒப்பந்தம் தோல்வியில் முடிந்தது.

இலங்கையில் இந்திய இராணுவ வீரர்கள் சிந்திய இரத்தத்திற்கும், ஈழத்தமிழர்களின்சாவுக்கும் ராஜீவ்காந்தி தான் பொறுப்பு ஏற்கவேண்டும்.

மன்னிக்க முடியாத மாபெரும் தவறுகளைச் செய்வதற்கு மூலகாரணமாக இருந்து செயல்பட்ட மத்திய அரசின் புலனாய்வுத்துறை 'றோ' மிகக் கொடுமையான குற்றங்களைப் புரிந்துள்ளது.

ஈழத் தமிழர்களின் ஆதரவு எள்ளளவும் இல்லாத காரணத்தால் தான் வரதராஜப் பெருமாள்போன்றவர்களுக்கு அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலைமை.

தங்கள் தாய்நாட்டின் நலன்களைப் பலி கொடுத்து விட்டு, தங்களின் மனசாட்சியை விற்று விட்டு இன்னொரு நாட்டுக்கு கொத்தடிமை ஆகின்றவர்களுக்கு இந்தக் கதிதான் ஏற்படும். ராஜீவ் காந்தியை நம்புகிறவர்களுக்குக் கடைசியில் இந்தக் கதி தான் ஏற்படும்.

ஈழத் தமிழரிடையே பிளவை ஏற்படுத்தத் தான் இந்திய ராணுவம் செயற்பட்டது.

'றோ' தனது இலங்கை நடவடிக்கைகளை ராஜீவ் காந்தி அமைச்சரவையின் முழு ஒப்புதலோடுதான் செய்ததா? அல்லது தன்னிச்சையாகச் செயற்பட்டதா? என்பதை விசாரணை நடத்தி கண்டறிய வி பி. சிங் அரசு முன்வரவேண்டும்.

ஈழப்பிரச்சினையில் ராஜீவ் அரசு செய்த தவறுகள் மிகப் பாரியானவை என்று திரு. சோபாலசாமி சொன்னார்.

(ஒ-எ)

ரமழான் சிந்தனை
இஸ்லாம் கூறும் மனைவி

"உலகம் முழுவதும் சில நாள் பொருளாகும். அப்பொருள்களில் எல்லாம் தலை சிறந்தது நல் ஒழுக்கமுள்ள மனைவியாவாள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"எந்தப் பெண்ணும் அவளுடைய கணவன் அவள் மீது திருப்தி உள்ள நிலையில் இறந்து விடுவாளாயின் அவள் சுவன பதி செல்வாள்" என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"ஒரு முஸ்லீம் தம் மனைவியின் மீது எப்பொழுதும் அதிருப்தியுடன் இருக்கக் கூடாது. அவளுடைய ஒரு குணம் பொருத்தமற்றதாக இருப்பினும் மற்றொரு குணம் பொருத்த முள்ளதாகவே இருக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"ஒரு விதவையுடன் வாழ்ந்து ஆயிரக்கணக்கில் அவளை நீங்கள் மறுமணம் செய்து கொள்ள வேண்டாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய அபிவிருத்தியிலில்

நுணாவில் விநாயகர் திருவிழா

சாவகச்சேரி ஏப்ரல் 1

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த விழாக்கள் 5 ஆம் திகதி வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்கள் நடை பெறும் (க-31)

மாதகல் திருமுகம்

விவசாய உற்பத்தியில் தன்னிறைவு வேண்டும்

எங்கள் மக்களின் தற்போதைய பொருளாதார நிலை மிகவும் குன்றிய நிலையில்உள்ளது. தென்னிலங்கையிலிருந்து எங்களுக்கு அரிசி, மா, சீனி, முதலிய அத்தியாவசியப் பொருள்கள் ஒரு கிறமைக்கு வராமல்விட்டால் எங்கள் நிலைமை என்ன என்பதை பொது மக்கள் இன்றும் உணரவில்லை சீனிக்கு பதிலாக பனங்கட்டி உற்பத்தி ஊக்குவிக்கப்பட வேண்டும், கரும்பு உற்பத்தியும் ஊக்குவிக்கப்பட வேண்டும், தண்ணீர்ப்பற்றாக்குறைக்கு குளங்கள் உடன் சீர் அமைக்கப்படவேண்டும், மகாவலி கங்கை ஆற்றை திசைதிருப்பி வடமாகாணத்திற்குதண்ணீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். இளைஞர்கள் வெளிநாடு செல்ல ஏஞ்சி உள்ளது பெண்கள் மாத்திரம். அவர்கள் 90 சதவீதமாக இருக்கின்றார்கள் ஆகவே, பிற நாடுகளில் இருந்து யந்திரங்கள் வரவழைக்கப்பட்டு விவசாய உற்பத்தியில் தன்னிறைவு காண மக்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

வி. எஸ். இராமநாதர்,
யாழ்ப்பாணம்.

விதிகளை சபை கவனிக்குமா

காரைநகர் வடக்கு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நீலிப்பந்தான விதியும் - மருதடி விதியும் கவனிக்கப்படாமல் குன்றும் குழியுமாக தார் இல்லாமலும் இருக்கின்றது. இந்த விதியால் லொறிகள் ரக்டர்கள் போக முடியாத நிலையில் இருக்கிறது ஆகவே கிராம அபிவிருத்தி சபை கவனித்து ஆவன செய்யும் படி கேட்டுக்கொள்கிறேன்.

க. பரமலிங்கம்
நீலிப்பந்தனை,
காரைநகர்.

என்ன பதில்?

ஒக்டோபர் 1987 ல் இந்திய அமைதிப்படையின் வருகையின் போது தமிழ் மக்களாகியநாம் பீதியுடன்அகதிகளாக நாலாபக்கமும் சிதறி ஓடினோம். நிச்சயம் ஒவ்வொரு தமிழனும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளான்.

இதைக்கண்ணுற்ற யாழ். செயலகம் எல்லோருக்கும் குறைந்த பட்ச நிவாரணமாகிய ரூபா 2000/- ஐ வழங்க முன் வந்தது. இதைக் கட்டம் கட்டமாக வழங்கியும் வந்துள்ளது.

இவ்வேளையில் என்னைப் போன்ற துரப்பாக்கியசாலிகளுக்கு இதுவரை எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. இதுவரை எதுவித நிவாரணபணமும் வழங்கப்படாதவர்களுக்கு யாழ் செயலகம் என்ன பதிலை அளிக்கப்போகிறது?

க. இராசலக்கமி
புதுச்செம்மண் வீதி,
நல்லூர்.

கலை விழா

யாழ்ப்பாணம் ஏப்ரல் 1

வழமை போல் பணிப்புலம் அம்பாள் சனசமூக நிலையத்தின் பௌர்ணமி கலை விழா இம்மாதம் 9 ஆம் திகதிஞாயிற்றுக் கிழமை கலைத்துறைத் தலைவர் பணிப்புலம் எஸ். யாதவன் தலைமையில் நடை பெறும்.

கண்டதும் கேட்டதும்

பிறப்புச் சான்றிதழ் அல்லது இறப்புச் சான்றிதழ் பெற வவுனியாக் கச்சேரிக்கு வரும் வன்னி மக்கள் முத்திரை பெறுவதற்கு மிகவும் திண்டாடுகின்றார்கள். தபால் நிலையம் அதிக தூரத்தில் இருப்பதே இதற்குக் காரணம். இக்குறைபாடு வவுனியாக்கச்சேரியில் மட்டும் அல்ல வடக்கிலும், கிழக்கிலும் உள்ள கச்சேரிகள் பலவற்றிலும் இருந்து வருகிறது. இதனால் இலாபம் அடைபவர்கள் முத்திரையில் கொள்ளை இலாபம் வைக்கும் வியாபாரிகளே.

சென்ற கிழமை அனுராதபுரக் கச்சேரிக்குச் செல்லும் வாய்ப்புக்கிடைத்தது இக்கச்சேரியின் பிரதான வாசலின் உள்ளே எம்மை வரவேற்பது கச்சேரித் தபாலகமே. பொது மக்கள் இதனால் பெரிதும் பயன் அடைந்து வருகிறார்கள். இவ்வாறான ஒரு நிலை எமது பிரதேசத்தில் உள்ள கச்சேரிகளிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

—செய்தி லோலன்

★ 'கொன்றா'விடம் இருந்து

ஆயுதங்கள் பறிக்கப்படும் என சாண்டினிஸ்டா எச்சரிக்கை

மனாகுவா, மார்ச் 31

தாங்களாக முன்வந்து கொன்றா கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்களை ஒப்படைக்கத் தவறினால் பலாத்காரமாக அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்படும் என்று சாண்டினிஸ்டா முன்னணியில் உத்தியோகபூர்வ பத்திரிகை அறிவித்துள்ளது.

பதவி விலகும் ஜனாதிபதி ஒற்றேகாவின்சாண்டினிஸ்டா படையைச்சேர்ந்த பன்னிரண்டு வீரர்கள் கொன்றா கிளர்ச்சியாளர்கள் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் மரணமடைந்தனர் என்பது தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை கடுமையான வாசகங்களில் வெளியிடப்பட்டது. பரிக்காடா என்ற அப்பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் ,கொன்றா கிளர்ச்சி அமைப்புக் கலைக்கப்படுவதற்கு ஏப்ரல் 20 வரை காத்து இருக்க முடியாது. உடன் அடியாக 'கொன்றா' அமைப்புகலைக்கப்பட வேண்டும்'' என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)

பிரிட்டனின் அடுத்த பிரதமர்?

லண்டன், மார்ச் 31

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டி திருமதி மார்கரட் தாட்சரே பிரிட்டனின் பிரதமர் ஆவார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் கன்சர்வேட்டிவ் கட்சியின் அடுத்த தலைவராக வரும் வாய்ப்பைப் பெற்றுள்ளவர் என்று கருதப்படுபவருமான மைக்கல் ஹறஸெல்ட்ஸன் முன்கண்ட ஆரூடத்தைச் சொன்னார்? (எ)

மாஸ்கோ ஆக்கிரமித்துள்ளதாக எஸ்தோனிய மாநிலம் அறிவிப்பு!

கிறெம்ளின் தொடர்பைத் துண்டிக்க நடவடிக்கை

மாஸ்கோ, மார்ச் 31

சோவியத் சமஷ்டி அமைப்பில் இருந்து பிரிந்துபோகும் முதற்கட்ட நடவடிக்கையை எஸ்தோனிய மாநிலத்தின் நாடாளுமன்றம் நேற்று எடுத்தது.

கிறெம்ளின் அரசுடனான தொடர்புகளைப் படிப்படியாகத் துண்டித்து, 1940 இல் இழந்த இறைமையை மீண்டும் பெற்றுக் கொள்வது என்று எஸ்தோனிய நாடாளுமன்றம் தீர்மானித்தது.

எஸ்தோனிய மாநிலத்தை சோவியத் யூனியன் இப்போது ஆக்கிரமித்துள்ளதாக எஸ்தோனிய நாடாளுமன்றம் மேலும் பிரகடனம் செய்தது.

1940 இல் ஹிட்லரின் ஜேர்மனியுடன் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தம் மூலம் பால்டிக் நாடுகளில் ஒன்றான எஸ்தோனியாவை சோவியத் யூனியன் தனது சமஷ்டி அமைப்பில் இணைத்துக் கொண்டதாகவும் எஸ்தோனிய நாடாளுமன்றம் குற்றஞ்சாட்டியது.

பால்டிக் குடியரசுகளில் ஒன்றான லித்துஏனியா மாநிலம் மூன்று வாரங்களுக்கு முன்னர் ஒரு தலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்திருந்தது தெரிந்ததே.

அந்த நெருக்கடியைத் தீர்க்க முடியாமல் தத்தளிக்கும் தருணத்தில் எஸ்தோனிய மாநில அரசு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையில் — லித்துஏனியா சுதந்திரப் பிரகடனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வு காணும்படி அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவுக்கு வேண்டுகோள் விடுத்தார். (எ)

★ அரபுப் பகுதிகளில்

சோவியத் யூதர் குடியேற்றம்; இந்தியா பலத்த எதிர்ப்பு!

புதுடில்லி, மார்ச் 31

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரை மற்றும் காஸா பிரதேசத்தில் சோவியத் யூதர்களை இஸ்ரவேல் அரசு குடியமர்த்த எடுக்கும் முயற்சிகளுக்கு எதிராக ஆதரவு தேடப்போவதாக இந்தியா அறிவித்தது.

இஸ்ரவேலியரின் இத் திட்டம் சர்வதேசச்சட்டம், நீதி ஆகியவற்றுக்கு முரணானது என்று இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் தன்னைச் சந்தித்த பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்திடம் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் சோவியத் யூனியனில் இருந்து ஒரு லட்சம் யூதர்கள் இஸ்ரவேலுக்குச் செல்ல உள்ளனர். (எ)

பலஸ்தீனம் - காஷ்மீர் ஒப்பீடு; சரியல்ல என்கிறார் அரபாத்

புதுடில்லி மார்ச் 31

பலஸ்தீனியரின் விடுதலைப் போராட்டத்துடன் காஷ்மீர் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒப்பிடக் கூடாது.

இப்படி பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் புதுடில்லியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

சர்வதேச புரிந்துணர்வுக்கான நேருஜி விருதைப் பெறுவதற்காக அரபாத் கடந்த திங்கட்கிழமை புதுடில்லிக்கு விஜயம் செய்தார்.

காஷ்மீர் பிரச்சனை காஷ்மீருக்கும் இந்தியாவுக்கும் இடையேயான இருதரப்புப் பிரச்சனையாகும்.

இந்தியாவுக்கு காஷ்மீர் தகராறு ஓர் உள்நாட்டு விஷயமாகும் என்றும் யாசிர் அரபாத் சொன்னார். (ஒ-எ)

ஐ.நா. பேச்சு

ஐநா. மார்ச் 31

எல்சல்வடோரில் சிவில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள கெரில்லாக்குழுவுடன் ஐ.நா. பேச்சுவார்த்தைநடத்த உள்ளது.

அடுத்த வாரம் வாஷிங்டனில் இப்பேச்சுக்கள் நடத்தப்படும் என்று ஐ. நா. பொதுச்செயலாளர் அறிவித்தார். (எ)

நாகலாந்தில் மது விலக்கு

புதுடில்லி மார்ச் 31

இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றான நாகலாந்தில் பூரண மதுவிலங்கு சென்றவியாழன் முதல் அமுலுக்கு வந்தது.

இது சம்பந்தமான சட்டம் நேற்று நாகலாந்து சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி, நாகலாந்து மாநிலத்தில் மது தயாரிப்பு, மது விநியோகம், மது வெளி மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படுவது ஆகியன பூரணமாகத் தடை செய்யப்படுகின்றது.

இதன் மூலம் இந்திய மாநிலங்களில் பூரண மது விலக்கை அமுல் நடத்தும் ஒரே ஒரு மாநிலம் என்ற பெருமை நாகலாந்துக்குக் கிடைத்துள்ளது. (ஒ-எ)

தேவை

1. அனுபவமுள்ள தட்டச்சு இயந்திரங்கள் திருத்துபவர்.
2. தட்டச்சு இயந்திரங்கள் திருத்திப் பழக விரும்புபவர்கள். (வயது 25க்கு உட்பட்டவர்கள்)
3. Office Peon (வயது 20க்கு உட்பட்டவர்.)

★ சம்பளம் மற்றவை நேரில்

FUDO ENTERPRISES

39/17, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

[சி-4194]

கொம்பியூட்டர் குறிப்புக்கள்

Diploma in Data Processing and Computer Programming in BASIC

★ புதிய வகுப்புக்கள் ஆரம்பம் ★

வாரநாட்கள் 05 – 04 – 1990 9 a. m.

வார இறுதிநாட்கள் 07 – 04 – 1990 9 a. m.

Project, Filehandling உட்பட விரிவான பயிற்சிநெறி பயிற்சி முடிவில் பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

PASCAL வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. சிறந்த Programmers ஆகுவதற்கு இன்றே உங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

3 மாத BASIC Programming செய்து Filehandling, Project செய்யாதவர்களுக்கும் விசேட வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனமெடுப்பதால் குறிப்பிட்ட தொகை மாணவரே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

கட்டணம்: ரூபா 1500/– பதிவு: ரூபா 25/–

முன்னைய கன்ரபியா விரிவுரையாளர் ஸ்ரீதரன் அவர்களினால் விரிவுரைகள் நடாத்தப்படும்

கொம்பியூட்டர் சயன்ஸ் அக்கடமி

[சி. எஸ். ஏ.]

நாவலடிலேன் திருநெல்வேலி

(திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கல்வியங்காடு மார்க்கமாகச் செல்லுகையில் 7வது கைப்பக்கமாக இரண்டாவது ஒழுங்கை)

[2933]

கலை வர்த்தகக் கல்லூரி

C. C. A

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்தி அருகே)

A/L 90 DAY CLASSES

பிரிவு III

மிட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்

02 - 04 - 1990

திங்கள்: 8.00 A.M

★ எமது வழமையான ஆசிரியர் குழு
★ ஒவ்வொரு பாடமும் வாரத்தில் 8 மணித்தியாலமாக நடைபெறும்.
★ முழுப்பாடத் திட்டமும் முடிக்கப்படும்.
★ வினா விடை வகுப்புக்கள் இலவசமாக நடைபெறும்.

(சி/4186)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L 90 DAY CLASS

இந்துநாகரிகம் / இந்துசமயம் — அருள்நங்கை

2ஆம் பிரிவு

ஆரம்பம்: 02 - 04 - 1990

(சி/4178)

"தாதிகள் தேவை"

கிளிநொச்சியிலுள்ள நன்கு ஸ்தாபிக்கப்பெற்ற தனியார் வைத்தியசாலைக்கு அனுபவமுள்ள தாதிகள் தேவை. தகுதிக்கேற்ப சிறந்த சம்பளமும். உணவும் இருப்பிடவசதியும் தரப்படும்.

வைத்திய அதிகாரி,
சாந்தி வைத்தியசாலை,
கிளிநொச்சி.

(2993)

FINCHEM AGRO DIVISION

விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி

BASF

நீங்கள் பாவித்த

குமுலுஸ் DF சல்பர்

வெற்றுப் பைக்கற்றுகளைப் பிரயோசனப்படுத்தி பெறுமதிமிக்க பரிசில்களைப் பெறும் சந்தர்ப்பம் வந்துவிட்டது

குமுலுஸ் DF போட்டியில்

நீங்களும் ஓர் அதிஷ்டசாலியாகலாம்

★ விபரங்கள் வெகுவிரைவில் உதயன் பத்திரிகையில் பிரசுரமாகும் ★

அதுவரை குமுலுஸ் DF வெற்றுப் பைக்கற்றுக்களை சேகரித்து வைத்திருங்கள்

மிளகாய் செய்கையில் உண்டாகும்
குருமன், எரிகுருமன் நோய்களை அறவே அழித்திட
குமுலுஸ் DF உடன் டயசின் அல்லது
குமுலுஸ் DF உடன் பேர் (F) வெக்தியோன் கலந்து பாவியுங்கள்

★ இவை மேற்கு ஜெர்மனியின் உற்பத்திகளாகும் ★

பீடை நாசினிகள் அபாயகரமானவை, அவதானமாக பாவிக்கவும்.

பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ்

(பிரைவேட்) லிமிட்டெட்

186, வக்சோல் வீதி, கொழும்பு - 2

விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

90 DAY CLASSES

(8.00 — 1.00)

பிரிவு 1 ஆரம்பமாகிவிட்டது

பிரிவு 2 ஆரம்பம்: 2 - 4 - 90 காலை 8.00

நேர அட்டவணை;

8.00 – 9.00 வர்த்தகம் / இ. நாகரிகம்
9.00 – 10.30 பொருளியல்
10.30 – 12.00 கணக்கியல் / தமிழ்
12.00 – 1.00 அளவையியல் / அரசியல்

மு. குறிப்பு: I தவித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து போதிக்கும் ஒரே நிறுவனம்.
II வினா, விடை வகுப்புகள் இலவசமாக நடாத்தப்படும்.
III விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-4164]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய இராணுவத்தை நான் அவமதிக்கவில்லை!

கலைஞர் கருணாநிதி கூறுகிறார்

தாயகம் திரும்பிய அமைதிப்படை வரவேற்பில் கலந்து கொள்ளாததை இந்திய இராணுவத்தை அவமதித்தாகக் கருதக்கூடாது.

முதலமைச்சர் கருணாநிதி நேற்று முன்தினம் சட்டசபையில் இதனைத் தெளிவுபடுத்தினார்.

இது பற்றி எதிர்கட்சி எம்.எல் ஏக்கள் கேள்வி எழுப்பிய போது—

கருணாநிதி, 'இந்திய இராணுவத்தின் மீது எனக்கும் தி.மு.க. கழகத்துக்கும் ஆழ்ந்த மரியாதை உண்டு. அதே நேரம் அமைதிப்படையை அங்கே அனுப்பிவைப்பதற்கு முந்தைய மத்திய அரசு மேற்கொண்ட முடிவை ஆட்சேபித்தே நான் அந்த வரவேற்பில் கலந்து கொள்ளவில்லை' என்று சொன்னார்.

இதைத் தொடர்ந்து இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ. குமரி அனந்தன் விளக்கம் கோரமுயற்சித்தார். அதற்கு சபாநாயகர் தமிழ்க்குடிமகன் அனுமதியளிக்க மறுத்து விட்டார்.

அதனைத் தொடர்ந்து அ.தி.மு.க மற்றும் இந்திரா காங்கிரஸ் எம்.எல். ஏக்கள் வெளிநடப்புச் செய்தனர்.

காலிஸ்தான் தீவிரவாதிகளுடன் பேசவில்லை என்று புலிகள் மறுப்பு

சட்டசபையில் கருணாநிதியும் அறிக்கை

சென்னை, ஏப்ரல் 1

காலிஸ்தான் தனிநாடு கோரிப் போராட்டம் நடத்தும் சீக்கியத் தீவிரவாதிகளுடன் தமது இயக்கப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் மறுத்துள்ளனர்.

எவரும் சீக்கியத் தீவிரவாதிகளுடன் பேசியிருந்தால் சம்பந்தப்பட்டவருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் சம்பந்தம் இல்லை. இது எமது இயக்கம் மீது மாசு கற்பிக்க எடுக்கப்படும் முயற்சியாகும் -- என்றும் விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தமிழீழ விடுதலைப் புலிகளைச் சம்பந்தப்படுத்தி வெளியான செய்திகள் குறித்து சட்டசபையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

இந்திய நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஊறுவிளைவிக்கும் எவர் மீதும் சுடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழகப் பொலீஸாருக்குக் கட்டளையிடப்பட்டு உள்ளது— என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். (அ-எ)

மீனவர் சங்க கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஏப் 1

கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாண மனோகரா தியேட்டரில் நடைபெற இருக்கிறது.

கடற்றொழில் சம்பந்தப்பட்ட அமைப்புக்களின் தலைவர்கள், செயலாளர்களை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் கேட்டுள்ளனர். (ஒ-6)

3 மாதங்கள் கூடாமல்——

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும்.

கேள்வி: ஓரிஸ்ஸா, மொரிஷியஸ் அல்லது வரதராஜப் பருமாள் எங்கிருக்கிறாரோ அங்கு மாகாணசபைக் கூட்டம் நடந்தால் என்ன நடக்கும்?

பதில்: எனக்குத் தெரிந்த வரையில் அந்த மாகாணத்தினுள் தான் மாகாணசபைக் கூட்டம் நடைபெற வேண்டும் என்று எங்குமே கூறப்படவில்லை. மாகாண சபை அப்படிக் கூடினால் பிரச்சினை ஏற்பட முடியும்.

கேள்வி: ஆளுநர் என்ற முறையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளின் நிர்வாகத்துக்கும் நீங்களே பொறுப்பு. அப்படி இருக்கையில், ஏன் திருமலையில் நிரந்தரமாக இருக்கிறீர்கள்?

பதில்: ஏனென்றால் அரசின் ஆசனம் இங்குதான் உள்ளது. இப்போது திருமலை மாவட்டம் தான் கூடுதலாகக் கவனிக்கப்பட வேண்டி உள்ளது.

திருகோணமலையில் ஸ்திர நிலைமை நிலவுவது மாகாணத்தில் ஸ்திரநிலை நிலவுவதற்கு வழிவகுக்கும்.

திருகோணமலையில் ஏதாவது நடந்தால் அது முழு மாகாணத்தையுமே ஸ்திரமற்றதாக்கி விடும்.

கேள்வி: திருகோணமலை நிர்வாகத்தில் விடுதலைப் புலிகள் ஈடுபாடுகாட்டுவது உத்தியோகப் பற்றற்ற ரீதியில் தனே! இல்லையா?

பதில் ஆம் தேர்தல் நடத்தப்படும் வரை இப்படியே இருக்க வேண்டும். மக்கள் விடுதலைப் புலிகளுக்கு வாக்களிப்பின், மாகாணத்தை ஆளும் ஆணையை அவர்கள் பெறுவார்கள்.

கேள்வி: விடுதலைப் புலிகள் இயக்கம் உத்தியோகப் பற்றற்ற முறையில் நிர்வாகத்துக்கு உதவுவது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

பதில்: அது மிகவும் உதவியாக உள்ளது. மக்களின் நன்மைக்காக நிர்வாகத்தை பலனளிக்கக் கூடிய விதமாக மாற்ற அவர்கள் காட்டும் ஆர்வம் தெளிவாக தெரிகிறது.

கேள்வி: இதனால் விடுதலைப் புலிகள் குறித்து மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: ஆம். அதனைநான் ஏற்றுக்கொள்கிறேன். எனது அவதானத்தில் ஏற்பட்டது மட்டுமல்ல; பலரும் தொழில்சார் வல்லுநர்களும் இதனையே என்னிடம் கூறியுள்ளனர்.

கேள்வி: தேர்தல் நடத்தப்படும்வரை விடுதலைப் புலிகள் இயக்கம் இதே நிலையைத் தொடர்ந்து பேணுமா?

பதில்: அவர்கள் செய்ய வேண்டியது எல்லாம் தங்கள் இராணுவப் பிரிவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டியதுதான்.

கேள்வி: விடுதலைப்புலிகள் இயக்கம் தங்கள் இராணுவப் பிரிவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது என்று நீங்கள் திருப்தியடைகிறீர்களா?

பதில்: அவர்களின் இராணுவப்பிரிவு என்னுடன் ஒத்துழைக்கிறது எனபதை என்னால் உறுதிப்படுத்த முடியும். அரசியல் பிரிவு தற்போதைய அந்தஸ்தைப் பேணும்.

கேள்வி: பாதுகாப்பு நிலை கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்று உணருகிறீர்களா?

பதில்: நிச்சயமாக.

கேள்வி: விடுதலைப் புலிகள் இயக்கமும் அப்படித் தான் உணருகிறது. அவர்களும் இரண்டுபேர், மூன்று பேராக தாக்குதல்கள்பற்றிக் கவலைப்படாமல் செல்கிறார்கள்.

பதில்: ஆம். அவர்களும் தங்கள் பிரசன்னத்தை குறைவாகவே காட்டி வருகிறார்கள்.

கேள்வி: நீங்கள் பாதுகாப்பின்றி நகரில் சென்று வருகிறீர்கள். பூரண பாதுகாப்பு இருக்கிறது என்ற நம்பிக்கை உண்டா?

பதில்: ஆம். திருமலை மக்கள் மத்தியில் நம்பிக்கை உணர்வை ஏற்படுத்தவேண்டும் என்றால் வாகனங்களில் சிப்பாய்களுடன் நான் செல்லுவது முடியாதே.

கேள்வி: ஆளுநர் என்ற முறையில் தேவையானால் கூடுதல் துருப்புக்களை நீங்கள் அழைக்க முடியும், அமைதிப்படை போன பின்னர் துருப்புக்கள் இங்குவரவில்லை அது ஏன்?

பதில்: அதற்குத் தேவை ஏற்படவில்லை. தற்போதைய பாதுகாப்பு நிலைமை இப்பகுதிக்குத் துருப்புக்களை அழைக்கும் தேவையை ஏற்படுத்தவில்லை.

கேள்வி: பின்னர் கவலைப் படுவதைவிட இப்போது பாதுகாப்பாக இருப்பது நல்லது என்று நீங்கள் உணரவில்லையா? இங்குள்ள நிலையின் தன்மைகளைக் கொழும்பில் உள்ள அரசியல்வாதிகள் விளங்கிக்கொள்கிறார்களா?

பதில்: ஜெனரல்களிடம் யுத்தத்தை விட்டுவிடவேண்டும் என்பது மிக முக்கியம்.

யுத்தம்பற்றி அரசியல்வாதிகள் தீர்மானித்தவுடன் அதனை ஜெனரல்கள்தான் நடத்தவேண்டும். துருப்புக்கள் தேவை என்றால் அவை அனுப்பப்படும்.

துருப்புக்கள் தேவையில்லாதபோது அவை அனுப்பப்பட்டால் அதுவும் ஸ்திரமின்மையை ஏற்படுத்துவதில் முடியும்.

கேள்வி: ஆகவே சகஜ நிலையைநோக்கி திருகோணமலை ஒடுக்கமான பாதை ஊடாக சென்றுகொண்டிருக்கிறது; கவனமாக சரியாக வழிநடத்தப்படவேண்டும் என்ற மதிப்பீட்டை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

பதில்: முற்று முழுதாக. ராஜதந்திரியிலும் பார்க்க நான் கூடுதலாக சர்க்கஸ் விளையாட்டுக்காரராக இருக்கிறேன். (உ-எ)

ராஜ்ய சபை - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருதரப்பினரும் 20 நிமிடங்களுக்கு மேலாக கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

சபைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த டாக்டர் நஜ்மா ஹெப்டுல்லா குழப்பத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர கஷ்டப்பட வேண்டியதாயிற்று.

இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் ஜனாப் எம்.எச் முகம்மது இந்திய நாடாளுமன்றத்தின் இரு சபைகளுக்கு விஜயம் செய்து நடவடிக்கைகளை பார்வையிட்டார்.

அதன் பின்னரே இவ்வாக்குவாதம் இடம் பெற்றது.

1,729 தமிழ்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் எண்ணிக்கை 2,460 ஆகும். இவர்களில் 1,729 இலங்கைத் தமிழ்க் குழந்தைகள்.

எஞ்சியோர் ஆப்கானிஸ்தான், எதியோப்பியா, ஈரான், துருக்கி, லெபனான், அங்கோலா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இப்படிக் 'குழந்தை'கள் வந்து இறங்குவதைத் தடுக்க குடிவரவுச் சட்ட விதிகளை மேற்கு ஜேர்மன் அரசு திருத்தியுள்ளது.

இதனிடையில் —

வந்திறங்கும் குழந்தைகள் உண்மையில் 16 வயதுக்கு உட்பட்டவையா? என்பதைக் கண்டறிய வைத்திய பரிசோதனைகளை நடத்த மேற்கு ஜேர்மன் அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

இந்த வைத்திய பரிசோதனையின்போது கடந்த ஆண்டில் மட்டும் 1,116 இலங்கைத் தமிழ்க் குழந்தைகளின் பாஸ்போர்ட்டுக்களில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக 16 வயதுக்கு அதிகமாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. (ஒ-எ)

பொலீஸ்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோடை காலத் தாகம் தீர்க்கவும், பசி தீர்க்கவும் கீழ் மாடியில் உள்ள பொலீஸ் நிலைய உணவுக் காலைக்குச் சென்றனர்.

அங்கு பணிபுரிந்த இரண்டு ஊழியர்கள், பெயருக்குச் சிறிய எழுத்தில் விலைப்பட்டியலைப் போட்டுவிட்டு, குளிர்பானம் மற்றும் சிற்றுண்டிகளை அதிக விலைக்கு விற்றனர். பொதுமக்களில் பலரும் மொழிப்பிரச்சனை காரணமாக அவர்கள் கூறிய விலையைக் கொடுத்து வாங்கி தாகம் பசிதீர்த்தனர்.

சிங்களம் நன்றாகத் தெரிந்த ஒரு பெண்மணி வந்தார். விலைகளைக் கேட்டு அறிந்து போனார். கொள்கை விலைக்கு விற்பனை நடப்பது குறித்து இரண்டு ஊழியர்களுடனும் சிங்களத்தில் பொரிந்து தள்ளிக் கலகம்'' புரிந்தார்.

அத்தோடு நிற்கவில்லை. மேலிடத்தில் சென்று முறையிட்டார். நியாயம் பிறந்தது. உரிய விலைக்கு விற்கு மாறு உத்தரவிடப்பட்டது. உணவுச்சாலை சுவரில் விலைப்பட்டியல் பெரிய எழுத்துக்களால் கரியினால் எழுதப்பட்டது. தமிழர் ஒருவரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டார். நண்பகலுக்குப் பின்னர் [illegible] குளிர்பானங்களும், சிற்றுண்டிகளும் விற்கப்பட்டன. (அ-11)

மாகாண---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணத்தில் இருந்தபோது ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் பேரளவில் மாகாணத்தை நிர்வகித்தபோதிலும் சட்டமும் ஒழுங்கும் தமிழ் மண்ணில் இருக்கவில்லை என்று ஆயர் தியோகுப்பிள்ளை சுட்டிக் காட்டியுள்ளாராம்.

இந்திய அமைதிப் படை வழிபாட்டுத் தலங்களை உடைத்து நுழைந்தார்கள், தேடுதல் வேட்டை நடத்தினர், ஆலயத்தில் இருந்த பக்தர்களையும் கைது செய்தார்கள் —

கடந்த நவம்பரில் ஈ. பி. ஆர். எல். எவ். அணியினர் ஆலயப்பணியாளர் இருவரையும், ஆலய வாகனஓட்டி ஒருவரையும் கைதுசெய்து பின்னர் கொலைசெய்தார்கள்—.

கொழும்பில் இருந்து நியமிக்கப்பட்ட அரச அதிகாரி மூலம் எத்தனை நாளைக்கு அரசு நிர்வாகத்தை நடத்தப் போகிறீர்கள் -- என்றும் ஆயர் தமது வேண்டுகோளில் கேட்டிருக்கிறார் என்று பி. பி. சி. தெரிவித்தது.

அரச எழுது---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிட்ட வீதம் ஒதுக்கப்பட்டாலும் அந்த வீதத்திற்குரிய எண்ணிக்கையானோர் போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவர்.

1970 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆள்சேர்ப்பு வெவ்வேறு பதவிகளுக்கு என தனித்தனியாக நடத்தப்பட்டன. விண்ணப்பதாரிகளும் தனித்தனியாகவே விண்ணப்பிக்க வேண்டியிருந்தது.

ஆனால் இனிமேல் ஒரே வகையைச் சார்ந்த பதவிகளுக்கு பொதுவான ஒரு பரீட்சையே நடத்தப்படும்.

விண்ணப்பதாரிகள் மொழி மற்றும் பொது அறிவு ஆகிய இரு பாடங்களுக்கும் —

குறிப்பிட்ட துறைசார்ந்த விசேட பாடத்திற்கும் தோற்ற வேண்டியிருக்கும்.

விண்ணப்பதாரி பரீட்சைக்கு எங்கிருந்தும் தோற்றலாம். ஆனால் குறிப்பிட்ட ஒரு மாவட்டத்தில் நியமனம் பெறுவதற்கு —

★ பரீட்சை நடைபெறுவதற்கு நேரடியாக முதல் இரண்டு வருடங்களாக குறிப்பிட்ட அந்த மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்திருப்பதை நிரூபிக்க வேண்டும். அல்லது

★ அந்த குறிப்பிட்ட மாவட்டத்தில் பிறந்திருக்க வேண்டும் அல்லது

★ ஜி. சி. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்கு அந்த மாவட்டத்திலிருந்து தோற்றியிருக்க வேண்டும்.

மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்ட கூட்டத்தில் --

★ பொதுப் பரீட்சை பற்றிய அறிவித்தலை ஏப்ரல் 16ஆம் திகதிக்கு முன்னர் பத்திரிகையில் வெளியிட வேண்டும் என்றும் —

★ பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி மே 15ஆம் திகதி என்றும் —

★ பரீட்சையை ஜூன் 30ஆம் திகதி முதல் ஜூலை 8ஆம் திகதி வரையும் நடத்துவது என்றும் —

★ பரீட்சையை மாவட்ட தலைநகரங்களிலும், முக்கிய நகரங்களிலும் — நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் அரசாங்க சேவைக்கு ஆள் சேர்ப்பதையும் பதவி உயர்வு வழங்குவதையும் இடை நிறுத்துவது என அரசு தற்போது அறிவித்திருப்பதால் —

இந்தப் பரீட்சை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நடைபெறாமல் ஒத்திப்போடப்படலாம் என்று அரசுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9)

உதவி - - -

கோரிக்கைகள் குறித்து விரிவான முறையில் பேச்சு நடத்தினர்.

அந்தப் பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்பட்டதை அடுத்தே வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய பேச்சுக்களின் போது காணப்பட்ட இணக்க நிலை தொடர்பாக இன்று 2 மணிக்கு யாழ். 'பொன்ட்' கல்வி நிறுவனத்தில் நடைபெறும் உதவி வைத்திய அதிகாரிகள் கூட்டத்தில் விபரமாகத் தெரிவிக்கப்படும்.

அடைக்கலம் தந்தவருக்கு ஆபத்து!

கொழும்பு, ஏப் 1

ஜே. வி. பி. தீவிரவாதி ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்ததாக சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவரின் மைத்துனர் மீது பொலீஸார் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

இத் தீவிரவாதி கடந்த டிசம்பர் மாதம் கைது செய்யப்பட்டார். [ஒ - எ]

எமது நேற்றைய வெளியீடு

பானுசந்தர். சுரேஸ், அஸ்வினி

1. போலிஸ் விசாரணை

முரளி, செந்தில்' நம்பியார்

2. பாலம்

3. Thango and Cash

எமது அடுத்த வெளியீடு

1, மிஸ்டர் கார்த்திக்

சுப்பஸோ வீடியோ ஒடியோ சென்ரர்

யாழ்வீதி. யாழ்ப்பாணம். (12149)

A/L 90

CHEMISTRY - திரு. மகாதேவா

சனி, ஞாயிறு நடைபெறும்

ORGANIC வகுப்புக்களுடன் மேலதிக வீடுமுறைக்கால வகுப்புக்கள்

திங்கள், புதன், வெள்ளி 11.00 மணி

Physical - Chemistry

ஆரம்பம்: 02 - 04 - 1990

குறிப்பு:- இடநெருக்கடி காரணமாக அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.

BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(சி-4203)

A/L

ZOOLOGY - திரு. கெங்காதரன்

திங்கள், புதன், வெள்ளி

8.00 - 11.00 பிறப்புரிமையியல் (GENETICS)

12.30 - 3.00 PAPER CLASS

சனி, ஞாயிறு

8.00 - 10-00 முளையவியல்

BOND INSTITUTES

58, Stanley Road, Jaffna.

(சி-4202)

வீதி ஒழுங்கில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

நேற்று யாழ் நகரில் வீதி ஒழுங்கு நடவடிக்கையிலும் பணியில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் ஈடுபட்டிருந்தனர். (உ-மு)

கண்ணீர் அஞ்சலி

அமரர் M. சிவபாதசுந்தரம் (பாலன்)

எமது ஸ்தாபனத்தின் முழுநேர ஊழியராகவும் ஊழியர்களினதும், வாடிக்கையாளர்களினதும் உள்ளம் கவர்ந்த நண்பனாகவும். இருந்து கடமை புரிந்த எமது அன்பிற்குரிய M. சிவபாதம் (பாலன்) அவர்கள் 30-3-1990 அன்று இறைவனடி எய்தி விட்டார். அன்னாரின் பிரிவால் வாடும்: அன்னாரது மனைவி, மக்கள் மற்றும் பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்களின் ஆறாத்துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

ரவிஅன்ராஜ் உரிமையாளர்கள்

சக ஊழியர்கள், நண்பர்கள்

(C/4205)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

சின்னத்தம்பி பாலசிங்கம்

மலர்வு: 25 - 11 - 1937 உதிர்வு: 29 - 03 - 1988

வருஷம் இரண்டு மறைந்ததுவே
உம்மை மறக்க முடியவில்லை
பண்பாய் எம்மை வளர்த்த
பாசமுள்ள தந்தையே!
நின் பிரிவு எம்மை வாட்டுகிறது
உமது ஆத்மா சாந்தியடைவதாக

உமது பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்.

வசாவிளான். [12257]

6ஆம்மாதம் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

(02—04—90)

ஆவரங்காலை பிறப்பிடமாகக் கொண்ட

திரு. இராசரத்தினம் இராசலிங்கம் (லிங்கம்)

படைப்பு: 15-09-1963 அழிப்பு: 27-10-1989

என் அருமை லிங்கமே! நண்பர்கள் குழ பல பல
நற்கதைகள் பேசுவாயே!
கொழும்பில் இருந்து வந்தவுடன்
யாருக்கும் தெரியாமல்
அயலின் காட்டுக்கு றிப்போட்டெடுக்கச்
சென்றாயே!
உமைக்காணாது அவ்விடம் ஓடி வந்தோம்
உன் மனைவி, பிள்ளை, உற்றார் உறவினர்கள்
தேடினோம் தேடினோம்
இன்று வரை உம்மைக் கண்டுகொள்ள முடியவில்லை
உம்மைப் பிடித்த கயவர்களின்
காலடியில் வீழ்ந்தோம்
கும்பிட்டோம் ஒரு பயனும் கண்டோம் இல்லை.
உம்மைப் பிடித்த துரோகிகள் துலைத்த
அன்று தான்
உம் நிலைமையை அறிந்தோம்.
ஐயா சற்றேனும் எதிர் பார்க்கவில்லை
உமக்கு இப்படி நடக்கும் என்று லிங்கமே!

உமது ஆத்மா சாந்தியடைய 31-03-1990 அன்று

கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இங்ஙனம்

மனைவி - சிவமலர்,

மகள் - நிசானி

தம்பாலை. [12255]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் கட்டுபவரும்
கண்ணாடி தருபவரும்.

கிளை: P. I. பர்னாண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.

உதயன்

01 - 04 - 1990 ஞாயிற்றுக்கிழமை

கண்ணாடி கொடுப்பவரும்
பல் கட்டுபவரும்!

P. I. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.

திருமலை பஸ் சேவையை சீர் செய்ய முயற்சி!

திருகோணமலை, ஏப். 1

திருமலை டிப்போவில் இயங்காமல் கிடக்கும் 6 பஸ் வண்டிகளைமீண்டும்சேவையில் ஈடுபடுத்த 5லட்சரூபா பெறுமதியான டயர், ரியூப், பற்றரி ஆகியவற்றை உடனடியாக வழங்குவதற்கு போக்குவரத்து அமைச்சர் திரு. விஜே பாலமெண்டிஸ் இணக்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் லெப்.ஜெனரல் நளின் செனிவரத்தினா இதுதொடர்பாக விடுத்த வேண்டுகோளை அமைச்சர் சம்மதம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் உள்ளூர் தலைவர்களுடன் சென்ற கிழமை டிப்போவிற்குச் சென்ற ஆளுநர் அங்கு நிலவும் குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

54 பஸ் வண்டிகள் இப்போது டிப்போவில் உள்ளன. அதில் 14 பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தமுடியாதவை என ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. 22 பஸ் வண்டிகள் தான் இப்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 18 பஸ் வண்டிகள் உதிரிப்பாகங்கள் இல்லாது கிடக்கின்றன. அதிலும் 6 பஸ் வண்டிகளுக்கு டயர், ரியூப், பற்றரி போன்றவை மாத்திரமே இல்லை. இவற்றைப் பெற்றால் இரண்டு நாட்களில் இந்த 6 பஸ் வண்டிகளையும் சேவையில் ஈடுபடுத்தமுடியுமென அதிகாரிகள் எடுத்துக் கூறினர்.

இதனையடுத்து ஆளுநர் அமைச்சருடன் தொடர்பு கொண்டு இவை பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தார். (உ-150)

இந்தியப்படையால் சேதமாக்கப்பட்ட

கோண்டாவில் கோயிலுக்கு இங்கிலாந்திலிருந்து மணி!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

இந்திய படையினரால் சேதமாக்கப்பட்டதாகக்கூறப்படும் இந்துக் கோவில் ஒன்றுக்கு இங்கிலாந்திலிருந்து கோவில் மணி ஒன்று வந்திருக்கிறது.

இதற்கான இறக்குமதி வரி மற்றும் சுங்கத் தீர்வை எதையுமே இலங்கை சுங்கத்திணைக்களம் அறவிடவில்லை.

கோண்டாவில் கிழக்கு அனவரத விநாயகர் கோவில் இந்திய படையின் தாக்குதலிற்கு இலக்காகி சேதமானது. கோவில் மணியும் முற்றாகச் சேத மடைந்தது.

இங்கிலாந்தில் உள்ள அன்பர் ஒருவர் இருநூறுகிலோ எடையுள்ள —சுமார் 5லட்சம் ரூபா பெறுமதியான —மணி ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.

கொழும்புக்கு மணி வந்து சேர்ந்ததும் முதலில் 2 லட்சம் ரூபா வரை தீர்வையாகவும், வரியாகவும் செலுத்துமாறு பணிக்கப்பட்டது.

ஆனால் கோவில் நிர்வாகிகள் இந்தியப்படையினரால் முன்னர் ஏற்பட்ட சேதங்கள் பற்றி அதிகாரிகளுக்கு எடுத்துரைத்ததை அடுத்து விதிக்கப்பட்ட வரிகள் ரத்துச் செய்யப்பட்டது. (உ-9)

ஆசிரியர் ஆயத்து அலவன்ஸ் மாகாண அமைச்சு வழங்கும்

அமைச்சுச் செயலாளர் தகவல்

மட்டக்களப்பு, ஏப். 1

வடக்கு - கிழக்கு ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள ஊழியர்கள் ஆகியோருக்கான பயங்கரவாதபிரதேச ஆபத்து அலவன்ஸை மாகாண அமைச்சு வழங்கும். எதிர்வரும் ஜூலை மாதச் சம்பளத்துடன் 2 ஆல்லது 3 மாத நிலுவை வழங்கப்படும்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சுச் செயலாளர் திரு. இ. ஜே. சற்குணராசா மட்டக்களப்பு கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

திரு. சற்குணராசா அங்கு மேலும் பேசுகையில் இந்த அலவன்ஸை வழங்க 12 கோடியே 50 லட்சம் ரூபா தேவைப்படும் என்றும் நிதி இல்லாதபடியால் இதனை வழங்க முடியாது என்று மத்திய கல்வி அமைச்சு அறிவித்து விட்டது என்றும் தெரிவித்தார்.

கட்டடங்கள் தவிர்ந்த சில செலவினங்களைக் கட்டுப்படுத்தி மீதமாகும் பணத்தில் இருந்து இந்த அலவன்ஸை மாகாணசபை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-21)

நினைவுத் தூபிகள் நிறுவுவதை நிறுத்தக்கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 1

இறந்த போராளிகள் நினைவாக தூபிகளைக் கட்டும் சகலரும் உடனடியாகத் தமது தூபிகட்டும் பணிகளை நிறுத்திவிட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளரைச் சந்திக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேண்டுகோளை விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் விடுத்துள்ளார்.

தூபிகட்டுபவர்கள் உடனடியாக கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகளின் யாழ். மாட்ட தலைமைக் காரியாலயத்தில் அரசியல் பொறுப்பாளருடன் தொடர்புகொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [அ-9)

புலிகளின் திருமலையில் ஏற்பாட்டில் பஸ் சேவை!

திருகோணமலை, ஏப். 1

திருகோணமலையில் விடுதலைப் புலிகள் மினி பஸ் சேவைஒன்றை ஆரம்பித்துள்ளனர். திருமலையிலிருந்து — தியாயவரை இந்தச் சேவை காலையிலும் மாலையிலும் நடைபெறுகிறது.

அரச அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்களின் நன்மை கருதியே இந்த மினிபஸ் சேவை நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



வீரமரணம் அடைந்த எட்டு விடுதலைப் புலிகள் போராளிகளின் ஞாபகார்த்தமாக ஒட்டுசுட்டானில் அமைக்கப்பட்டுள்ள கம்பீரமான எண்கோண தூபியையே படத்தில் காண்கின்றீர்கள். [படம் ஒட்டுசுட்டான் செய்தியாளர்]

விபத்தில் பெண்மணி காலை இழந்தார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

மீசாலையில் நேற்று இடம்பெற்ற லொறி விபத்து ஒன்றில் பெண்மணி ஒருவர் படுகாயமடைந்தார். விபத்தில் அந்தப் பெண் தமது இடது காலை இழந்துவிட்டார்.

வெள்ளாம் போக்கட்டா என்ற இடத்தைச் சேர்ந்த 48 வயதுடைய சரஸ்வதி இராயப்புஎன்றஅந்தப் பெண் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வானில் இருந்து இறங்கி வீதியைகடக்க முற்படுகையில் எதிர்புறத்தில் வந்த லொறியும் சம்பந்தப்பட்ட பெண்ணும் மோதிக் கொண்டதிலேயே அவர் காயமடைந்தார் எனச் சொல்லப்பட்டது. (ஒ-6)

ஐவர் கைது

கொழும்பு, ஏப் 1

பொலநறுவைப் பகுதியில் கடந்த வெள்ளியன்று ஜே. வி. பி. சந்தேகநபர்கள் என சந்தேகிக்கப்படும் ஐந்து பேரை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர். [உ]

'றோவுக்கு' முதற்கட்டம் தோல்வி; அடுத்த கட்டம் எந்த நிலையில்?

விடுதலைவிரும்பி எம். பி. இப்படிக் கேட்கிறார்

புதுடில்லி, ஏப்ரல் 1

இலங்கையில் 'றோ' வின் முதற்கட்டம் தோல்வியைக் கண்டுவிட்டது. அதன்அடுத்த இரண்டாவது கட்டம் எந்த நிலையில் உள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக எம் பி. திரு. எஸ்.விடுதலைவிரும்பி அண்மையில் ராஜ்யசபாவில் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

திரு. விடுதலை விரும்பி ராஜ்யசபையில்மேலும் பேசியதாவது:-

ஒரிஸ்ஸாவில் தமிழ் அகதிகள் தங்கியிருப்பது குறித்து அளிக்கப்பட்டபதில்எனக்குத் திருப்தியளிக்கவில்லை.

முன்னாள் இந்திய அரசின் சுவீகரிக்கப்பட்ட குழந்தைதான் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம். அமைதிப்படை வெளியேற்றத்தினால் ஏற்படும் இடைவெளியை நிரப்பவேதான் தமிழ் தேசிய இராணுவம் உருவாக்கப்பட்டது. தமிழ்தேசிய இராணுவத்துக்கு முன்னாள் இந்திய அரசுதான் நிதி உதவியும் பயிற்சியும் அளித்தது

ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர்களுக்குப் பயிற்சியும் பாதுகாப்பும் அளிப்பதாக 'றோ' என்ற இந்தியப் புலனாய்வு நிறுவனம் உறுதியளித்துள்ளது.

முதல் கட்டத்தில் தோல்வி கண்ட 'றோ' வின் இரண்டாவது கட்டம் எந்த நிலையில் உள்ளது?

இப்படி திரு. விடுதலை விரும்பி கேட்டார்.

வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் பதிலளிக்கையில் றோவின் முதல் கட்டம் இரண்டாம் கட்டம் பற்றி எல்லாம் எனக்குத் தெரியாது.

ஆனால் மூன்றாம் கட்டம் நல்ல படியாக அமையும் என்பதை என்னால் சொல்லமுடியும்.

மூன்றாவது கட்டம் இலங்கையுடன் நல்லுறவை ஏற்படுத்துவதுதான் என்றுஅமைச்சர் குஜ்ரால் சொன்னார். (ஒ-எ)

போராளிகளின் நினைவுத்தூபிகள் எமது சமுதாயத்துக்கு வழிகாட்டிகள்

ஒட்டுசுட்டான் கூட்டத்தில் மாத்தயா

ஒட்டுசுட்டான் ஏப்ரல் 1

ஒரு போராளி வாழும் போது அவனது வாழ்க்கை ஒரு வரலாறு ஆகிறது. அவன் மடியும் போது அவனது வாழ்க்கை ஒரு பாடமாகிறது. போராளிகளுக்கு எழுப்பப்படும் நினைவுத் தூபிகள் எதிர்கால சமுதாயத்திற்கு வழிகாட்டியாகின்றன.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. மாத்தயா ஒட்டுசுட்டானில் புதன்கிழமை நடைபெற்ற நினைவுத் தூபி திறப்பு விழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போராளி ஒருவன் சமுதாயத்திற்கு ஒரு முன்னோடியாகத் திகழ்கின்றான் சாதி வேற்றுமையை அகற்றி அனைத்து மக்களும் சமம் என்ற நிலையில் அவன் வாழ்ந்து வருகின்றான். போராளி தனதும் தனது நாட்டு மக்களினதும் விடிவிற்காகவும் போராடுகின்றான்.

தமது குடும்ப பாசத்தை தமது எதிர்காலத்தை, மற்றும் எல்லாவற்றையுமே மறந்தே போராளி தனது கடமையைச் செய்கிறான். நீங்கள் யாருக்காகவும் தியாகம் செய்வதென்று கூறாதீர்கள். நீங்கள் போராடுவது உங்கள் சுயனலத்திற்காகத்தான். நீங்கள் அடிமையாக வாழக் கூடாது, நீங்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் - என்று எமது தலைவர் திரு. பிரபாகரன் அடிக்கடி கூறுவார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உயிர் நீத்த போராளிகளுக்கு நீங்கள் நினைவுத் தூபி கட்டியுள்ளீர்கள். பொருளாகவோ, பணமாகவோ, உடல் உழைப்பாகவோ நல்கி இதனை நிறுவி உள்ளீர்கள். இதனைப் பார்த்து தமிழீழ மக்கள் பெருமைப்பட வேண்டும் - என்று திரு. மாத்தயா தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச விடுதலைப் புலிகள் பொறுப்பாளர், மற்றும் திரு. காசி ஆனந்தன் திரு. சந்திரன், மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த கீதா, சுந்தரி ஆகியோரும் கூட்டத்தில் பேசினார்கள்.

இரவு முழுவதும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (அ-113-126)

அதிகாரிகள் மாற்றம்

கொழும்பு, ஏப்ரல் 1

பாதுகாப்பு அமைச்சில் உள்ள இராணுவச் செயல் தலைமையகத்தின் பிரதம அதிகாரியாக பிரிகேடியர் வஜீரா விஜேரத்தினா நியமிக்கப்பட்டார்.

இப்பதவியை இதுவரை வகித்து வந்த பிரிகேடியர் திலக் பரணகம இராணுவத் தொண்டர் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். (உ-எ)

OBITUARY

Wimelarany Kanagaratnam

Wimelarany Kanagaratnam, beloved wife of late Mr. P. Kanagaratnam of 64/1 A, Cotta Road, Borella. Mother of Sara, Prem (Katunayake), and Dupsy (London), Mother in law of Sivany, Lalitha, and Siyamala (London). Sister of Pathme, Wimalendran (Vims, Jaffna), Niruba, Dolly and Robin (Switzerland) passed away in London.

Cremation will take place in London, 19, Huxley place, Palmer Green, London N-13-550.

Information:
Mr. & Mrs. Arunachalam
Mudeliyar Lane, Jaffna. (12150)

மரண அறிவித்தல்கள்

நடராஜகுமாரன் ஜெயமணி

சுந்தரோடையை பிறப்பிடமாகவும் மாதகலை வதிவிடமாகவும் கொண்ட நடராஜகுமாரன் ஜெயமணி 30-03-90 அன்று காலமானார்.

இவர் காலம் சென்ற சுந்தரோடை திரு. திருமதி குமரவேற்பிள்ளையின் இளைய மகனும், நடராஜகுமாரனின் (RTD. Divisional- Officer) அன்பு மனைவியும், ஜெயவிக்கிரம குமாரன் (U K), இரட்ணேஸ்வரி, சந்திரகுமார் (சவூதி), தெய்வாதீஸ்வரி (U.K), கடம்பகுமாரன் (U.K), கிருஷ்ணகுமார் (மானிப்பாய் இந்துக் கல்லூரி உயர்தர மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலாதேவி (U K), கோபாலகிருஷ்ணன் (கட்டிட மேற்பார்வையாளர்), தயாசீலி, செல்வேந்திரன் (U.K), ஆகியோரின் அன்புமாமியாரும், கேதீஸ்வரன், சர்வேஸ்வரன், ஞானேஸ்வரன், நிர்மலகாந் (U.K), தயானந்தன், அனுஷா, (U.K), கிரிஷாந்தி, சுபாஜினி, கௌசிகா (U K), ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற கதிர்காமதாஸ்.முத்துக்குமாரதாஸ் (RTD Highways Dept.), கௌத்தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் தகனக் கிரிகைகள் இன்று [1-4-90] காலை 8-00 மணிக்கு மாதகல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர் நடராஜகுமாரன்,
பிள்ளைகள்.

காந்திபுரம்,
மாதகல். [3107]

திருமதி கண்மணி துரைராசா

காரைநகர் 1ஆம் கட்டையை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கண்மணி துரைராசா காலமானார். அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் துரைராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியை அம்பலவாணர் சின்னப்பிள்ளை (தையலம்மா)வின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையாவின் அருமைச் சகோதரியும், திருமதி சின்னம்மா இராசையாவின் அன்பு மைத்துனியும், திருமதி குணமணி அரியரத்தினம், அல்பிரட் அமிர்தநாயகம் (இங்கிலாந்து), காலஞ்சென்ற திருமதி ஏஞ்சல்கிரி ஆகியோரின் அன்பு மாமியாரும், திரு. அரியரத்தினம், திருமதி இரட்ணஜீவகி அமிர்தநாயகம் (இங்கிலாந்து), திரு. கிரி (இங்கிலாந்து) ஆகியோரின் சிறிய தாயாரும், அரீன், ஷெரீன், கோட்டன் (இங்கிலாந்து), ஜொஸபின் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவர். அன்னாரின் நல்லடக்க ஆராதனை ஞாயிற்றுக்கிழமை (01-04-90) பி. ப. 3.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று சாம்பலோடை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. துரைராசா (கணவர்)
[இளைப்பாறிய ஆசிரியர்]

1 ஆம் கட்டை,
காரைநகர். [12146]

கபிலன்

ஞானஸ்கந்தன் - பிரேமலா தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், சுகன்னியாவின் அன்புத் தம்பியுமாகிய கபிலன் கனடாவில் (Mississauga, Ontrio, Canada) 30-3-90 இல் காலமாகிவிட்டார். அன்னார் வேலணையைச் சேர்ந்த கந்தர் காங்கேசு - சிவபாக்கியம் தம்பதிகளினதும், உரும்பராயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தருமலிங்கம் - புவனேஸ்வரி தம்பதிகளினதும் பேரனுமாவார். இவர் தருமலா (London), ஜெயமலா (London), அருள்மலா ஆகியோரின் பெறாமகனும், பேபி (Central Nursing Home), கலா (Central Nursing Home), பிரேம்குமார் (London), சூரியகுமார்(London) ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 1-4-90 இன்று காலை 9 மணியளவில் கனடாவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
பேரன் தருமலிங்கம்

புவனகம்,
கோப்பாய் றோட்,
உரும்பராய். (12147)

கந்தையா செல்லையா

திருநெல்வேலி கிழக்கு, கந்தையா செல்லையா அவர்கள் காலமானார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, பொற்கொடி, இராஜேஸ்வரி, சபாலிங்கம் (ஜேர்மனி), இரத்தினசிங்கம் (நோர்வே), துரைராஜசிங்கம் (ஜேர்மனி) மகாலிங்கம் (மோட்டார் சைக்கிள் மெக்கானிக்), அன்னலிங்கம் (மோட்டார் சைக்கிள் மெக்கானிக்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம்சென்ற சண்முகநாதன், சற்குணம். சண்முகலிங்கம், இந்திராதேவி, கனகேஸ்வரி, ஜெயந்தி, பிரகலாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 1-4-90 பி. ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாட்டு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
[12151] மகன்மார் மகாலிங்கம், அன்னலிங்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org